# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.142/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நாகையன் | Father's Name | : | பிச்சை |
| Village | : | பழையனூர் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 73 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 27th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது பழையனூரில் வசித்து வருகிறேன். நான் தபால் துறையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். எனக்கு 3 மகள்கள், 2 மகன்கள் ஆக 5 பிள்ளைகள் இருந்தார்கள். இறந்த ரோபர்ட் (எ) சோமசுந்தரம் என்னுடைய 5 வது மகன். சாட்சி ஆஜர் எதிரிகள் அமர்ந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் சென்று பார்த்துவிட்டு வந்து எதிரிகளை தெரியும் என கூறுகிறார். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். 08.02.2025 ம் தேதி என் மகன் ரோபர்ட் (எ) சோமசுந்தரம், ரம்யா என்பவரின்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:21:30 +0530

ஓராண்டு நினைவு தின போஸ்டர் ஒட்ட சென்றான். என் மகனுடன் செல்வம், காளிதாஸ் ஆகியோரும் போஸ்டர் ஒட்ட சென்றார்கள். அவர்கள் போஸ்டர் ஒட்டிக் கொண்டிருக்கும் போது இரவு 7.30 மணியளவில் வடபாதிமங்கலம் பேருந்து நிலையத்தில் கோபிநாத், திலீப், சிவனேசன், புனிதபாண்டி, தினேஷ், சின்ராஜ் (எ) வடிவழகன் இன்னும் 3 பேர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு விட்டது. மேற்படி நபர்கள் என் மகன் ரோபர்டிடம் நீ இன்று கண்ணீர் அஞ்சலி போஸ்டை வேறொரு நபருக்கு ஒட்டுகிறாய் நாளை உனக்கு ஒட்ட வேண்டியிருக்கும் என சொல்லியுள்ளார்கள். உடனே அந்த 9 நபர்களும் என் மகன் ரோபர்டை கம்பு மற்றும் அருவாளால் அடித்துள்ளார்கள். சின்ராஜ் என்பவர் கருங்கல்லை எடுத்து என் மகன் ரோபர்டின் தலையில் போட்டுள்ளார். என் மகன் இரவு இறந்து விட்டான் என்ற விபரம் எனக்கு தெரியாது. 09.02.2025 ம் தேதி விடியற்காலை 5.00 மணிக்கு ரவிச்சந்திரனும் என் மகனுடன் போஸ்டர் ஒட்ட போன நபர்களும் என் மகன் இறந்த நிலையில் கிடப்பதாக சொன்னார்கள். நான் சென்று பார்த்துவிட்டு காலை 9.00 மணியளவில் நான் வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார்தான். அந்த புகார் **அ.சா.ஆ.1**. கோபிநாதன், அசின், திலீப் ஆகியோர் டாஸ்மாக் பார் நடத்தி வந்தார்கள். அது சம்மந்தமாக என் மகனுக்கும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:21:37 +0530

அவர்களுக்கும் பிரச்சனை இருந்து வந்தது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் தபால் துறையில் EDDA ஆக பணிபுரிந்து 2017 ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றேன். மேற்படி பணி தற்காலிக பணியாகும். எனக்கு Court, Police Station விபகாரங்கள் நன்றாக தெரியும் என்றால் சரி. என் மகன் இறந்து கிடந்த இடத்திலிருந்து என் வீடு ½ கி.மீ. தொலைவு இருக்கும். என் மகன் இறந்து கிடந்த இடம் பொது போக்குவரத்து சாலை, அந்த இடத்தில்தான் பஸ் வந்து செல்லும் என்றால் சரி. என் மகன் இறந்து கிடந்த இடத்திலிருந்து வடபாதிமங்கலம் காவல் நிலையம் கொஞ்ச தூரத்தில்தான் உள்ளது. எனக்கு என் மகன் இறந்த தகவல் கிடைத்து நான் அந்த இடத்திற்கு செல்லும் போது அங்கு ஊர்காரர்கள் கூட்டமாக இருந்தார்கள். போலீசாரும் தகவல் தெரிந்து அந்த இடத்திற்கு வந்து கூட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது என் மகனை யார் அடித்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். அங்கிருந்த உதவி ஆய்வாளர் கூட்டத்தில் இருந்தவர்கள் யார் மீது சந்தேகம் என என்னிடம் கேட்டார்கள், பார் நடத்துபவர்கள்தான் என சொன்னேன், பெயர் குறிப்பிட்டு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:21:44 +0530

சொல்லவில்லை. உதவி ஆய்வாளர் என் மகன் கிடந்த இடத்திலேயே எல்லா விபரத்தையும் எழுதி கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார். அப்போது காவல் துறையின் மோப்ப நாய் அந்த இடத்திற்கு வந்தது. அந்த மோப்ப நாயுடன் நான் பின்னால் செல்லவில்லை. போலீசார் எங்களை போகவேண்டும் என அங்கேயே நிற்க சொன்னதால் மோப்ப நாய் எங்கு சென்றது என எனக்கு தெரியாது. அங்கிருந்த ஊர்காரர்கள் மற்றும் என் உறவினர்கள் சேர்ந்து குற்றவாளிகள் பிடிக்கப்பட்டால்தான் என் மகனின் உடலை அங்கிருந்த எடுக்க வேண்டும் என சொல்லி சாலை மறியல் செய்தார்கள். சாலை மறியலில் ஈடுபட்டவுடன் அந்த இடத்திற்கு DSP மற்றும் உயரதிகாரிகள் வந்து விட்டார்கள். காலை 10.00 மணி சுமாருக்கு என் மகனின் இறந்த உடலை காவல் துறையினர் எடுத்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் என்னையும் காவல் துறையினர் காவல் நிலையத்திற்கு வரச் சொன்னதால் நாங்கள் காலை சுமார் 11.00 மணிக்கு காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் புகாரை எழுதிக் கொண்டார்கள். நான் சொல்ல சொல்ல புகாரை போலீசார் எழுதிக் கொண்டார்கள், அதன் பின்னர் நான் புகாரில் கையெழுத்து போட்டேன். கேசவன் என்பவர் எனக்கு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:21:50 +0530

வேண்டியவர், அவர் அ.தி.மு.க.வை சேர்ந்தவர், முக்கிய பிரமுகர். இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் தி.மு.க.வை சேர்ந்தவர்கள். இருதரப்பினரிடையே தேர்தல் முன் விரோதம் இருந்தது. என் மகன் இறந்தது சம்மந்தமாக கேசவன் முக்கியஸ்தர் என்ற முறையில் செயல்பட்டார் என்றால் சரி. சம்பவ இடத்தில் மின் விளக்குகள் அனைத்தும் அனைக்கப்பட்டு இருட்டாக இருந்த நேரத்தில் சம்பவம் நடந்ததாக சொன்னார்கள் என்றால் ஆமாம். என் மகன் இறந்து கிடந்த இடத்திலிருந்து டாஸ்மாக் கடை சுமார் 200 மீட்டர் தூரத்தில் உள்ளது. என் மகன் ரோபர்டிற்கு மது அருந்தும் பழக்கம் உண்டு. என் மகன் மீது பல குற்ற வழக்குகள் உள்ளன என்றால் சரி. என் மகனின் ஜாமீன் சம்மந்தமாக நான் சென்று ஏற்பாடு செய்வேன் என்றால் தவறு. எங்கள் ஊரில் சட்டத்திற்கு புறம்பாக சாராயம் விற்பது உண்டு என்றால் சரி. என் மகன் அதில் சம்மந்தப்பட்டுள்ளான் என்றால் தவறு. நினைவஞ்சலி போஸ்டரில் உள்ளவருக்கும் அதை ஒட்டிய நபர்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரி. என் மகன் ரோபர்டிற்கும் எதிரிகளுக்குமிடையே இதற்கு முன்பு எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரி. நான் முதல் விசாரணையில் சம்பவம் நடந்தது பற்றி சொல்லியுள்ள விபரங்கள் நான் கேள்விபட்டது என்றால் தவறு, நேரடியாக நான் பார்த்தேன். போலீசார் என்னை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:21:56 +0530

விசாரித்தபோதும் புகாரிலும் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி, அவ்வாறு சொல்லவில்லை என்றால் தவறு. கோபிநாதன், அசின், திலீப் ஆகியோர் டாஸ்மாக் பார் நடத்தி வந்தார்கள் எனவும் அது சம்மந்தமாக என் மகனுக்கும் அவர்களுக்கும் பிரச்சனை இருந்து வந்தது எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரி, அவ்வாறு சொல்லவில்லை என்றால் தவறு. என் மகனுக்கு ஏற்பட்ட இறப்பிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு. நான் எப்போதும் கையெழுத்து போட்டால் உடனடியாக அந்த கையெழுத்திற்கு கீழே தேதியும் குறிப்பிடுவேன் என்றால் சரி. என் மகனுக்கு இறப்பு வேறு நபர்களால் ஏற்பட்டது எனவும் எதிரிகளின் மீது சந்தேகத்தின் அடிப்படையில் போடப்பட்ட வழக்கு எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:22:04 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.142/2025**

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | காளிதாஸ் | Father's Name | : | ராமசாமி |
| Village | : | மாயனூர் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 35 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 27th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடபாதிமங்கலம் மாயனூரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். நான் இரவு நேரங்களில் போஸ்டர் ஒட்டும் வேலையும் செய்வேன். இவ்வழக்கில் இறந்துபோன ரோபர்ட் என் நண்பர். அ.சா.1 ரோபர்டின் அப்பா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 08.02.2025 ம் தேதி இரவு நினைவஞ்சலி போஸ்டர் ஒட்ட நான், ரோபர்ட், செல்வம் ஆகியோர் லெட்சுமாங்குடி, வடபாதிமங்கலம், கிளியனூர் ஆகிய இடங்களுக்கு சென்றோம். நாங்கள் மூவரும் மது அருந்திவிட்டு வீட்டிற்கு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:22:12 +0530

சென்று விட்டோம். மறுநாள் காலை 6.00 மணியளவில் என்னுடன் போஸ்டர் ஒட்டிய ரோபர்ட் வடபாதிமங்கலம் பேருந்து நிலையத்தில் இறந்து கிடப்பதாக சொன்னார்கள். நான் போய் பார்த்தபோது ரோபர்டின் பிரேதத்தை மூடி வைத்திருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 08.02.2025 ம் தேதி இரவு 11.00 மணியளவில் நான், ரோபர்ட், செல்வம் ஆகிய மூவரும் வடபாதிமங்கலம் கடைத்தெருவில் போஸ்டர் ஒட்டிவிட்டு வடபாதிமங்கலம் பஸ் ஸ்டாண்ட் அருகில் உள்ள டாஸ்மாக் பார் அருகே போஸ்டர் ஒட்டவந்தபோது டாஸ்மாக் பார் வைத்திருக்கும் கோபிநாத், அவரது தம்பி திலீபன் சூர்யா மற்றும் சிலர் எங்களிடம் என்னடா செய்கிறீர்கள் என கேட்டார்கள் எனவும் அப்போது ரோபர்ட் நாங்க போஸ்டர் ஒட்டுறோம் எங்களை ஏன் நீங்கள் கேள்வி கேட்குறீர்கள் என கோபியை பார்த்து கேட்டார் உடனே கோபிநாத், திலீபன் சூர்யா, சின்னராஜ் (எ) வடிவழகன், சுரேந்தர், அஸ்வின், விக்னேஷ், சிவநேசன், அப்பு (எ)

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:22:17 +0530

பெரியபாண்டி ஆகியோர் ரோபர்டிடம் பிரச்சனை செய்தார்கள் எனவும் இந்த பிரச்சனையை நானும் செல்வமும் இருதரப்பினரையும் சமாதானப்படுத்தினோம் அப்போது கோபி என்னைக்கிருந்தாலும் உன் சாவு என்னால்தான்டா என ரோபர்ட்டை பார்த்து சொன்னார் எனவும் நானும் செல்வமும் ரோபர்ட்டை அவர் வீட்டில் விட்டுவிட்டு மீதமுள்ள போஸ்டரை கிளியனூர், பழையனூர் ஆகிய இடங்களில் ஒட்டிவிட்டு திரும்பவும் வடபாதிமங்கலம் பஸ் ஸ்டாண்ட் வந்தபோது தெற்கு வீதியில் ரவிச்சந்திரன் வீட்டு முன்பாக ரோபர்டை கோபிநாத், திலீபன் சூர்யா, சின்னராஜ் (எ) வடிவழகன், சுரேந்தர், அஸ்வின், விக்னேஷ், சிவநேசன், அப்பு (எ) பெரியபாண்டி ஆகியோர் ஒன்று சேர்ந்து இவனை அடித்து கொல்லுங்கடா என சத்தம் போட்டுக்கொண்டே கட்டையாலும் ரீப்பராலும் ரோபர்டை மாறி மாறி அடித்தார்கள் எனவும் இதை பார்த்த நானும் செல்வமும் அப்படியே திகைத்துபோய் நாம் தடுத்தால் நம்மளையும் அடித்து கொன்றுவிடுவார்கள் என நாங்கள் இருவரும் இருட்டில் நீலமேகம் டீ கடைக்கு எதிரே உள்ளே Panchayat Ground Compound ல் பதுங்கி நின்றுகொண்டு பயத்துடன் நடப்பதை பார்த்துக் கொண்டிருந்தோம் எனவும் அப்போது சின்னராஜ், சுரேந்தர், அஸ்வின் மூவரும் கீழே கிடந்த கருங்கல்லை தூக்கி இதோடு செத்து ஒழிந்துபோடா என சொல்லிக் கொண்டே

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:22:23 +0530

கீழே கிடந்த ரோபர்டின் தலையில் போட்டார்கள் எனவும் அப்ப ரோபர்டிற்கு கையும் காலும் வெட்டி வெட்டி இழுத்தது இதைபார்த்த கோபி இவன் இன்னும் சாவலடா என சொல்லி மறுபடியும் கல்லை தூக்கி ஓங்கி ரோபர்டின் தலையில் போட்டுவிட்டு ஜோலி முடிஞ்சி போச்சு என சொல்லிக்கொண்டு அங்கிருந்து ஆளுக்கொரு பக்கமாக போய்விட்டார்கள் எனவும் இதை பார்த்த நாங்கள் இருவரும் அதிர்ச்சியில் உறைந்துபோய் நாம் யாரிடமும் இதை சொன்னால் நமக்கும் இதே கதிதான் ஏற்படும் என பேசிக்கொண்டு எதுவும் தெரியாததுபோல் வீட்டிற்கு தூங்க சென்று விட்டோம் எனவும் மறுநாள் காலை 6.00 மணியளவில் நேற்று இரவு நடந்தது என்னவாயிருக்கும் பார்த்துட்டு வரலாமென பஸ் ஸ்டாண்டை பார்த்தபோது ஊர் ஜனங்கள் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்துட்டு இருந்தாங்க நானும் ஒன்னும் தெரியாதமாதிரி பார்த்துகிட்டு நின்னேன் எனவும் ரோபர்டின் அப்பா கொலை சம்மந்தமாக வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் எனவும் பின் 13.02.2025 ம் தேதி வடபாதிமங்கலம் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நானும் செல்வமும் அங்கு நேரில் பார்த்த சம்பவத்தை தங்களிடம் மறைத்து விட்டோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:22:30 +0530

காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:22:35 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.142/2025**

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வம் | Father's Name | : | சின்னபிள்ளை |
| Village | : | மாயனூர் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 27th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாயனூரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன், போஸ்டர் ஒட்டும் வேலையும் செய்வேன். அ.சா.1, அ.சா.2 மற்றும் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். இவ்வழக்கில் இறந்த ரோபர்ட்டை எனக்கு தெரியும். கடந்த 08.02.2025 ம் தேதி இரவு 7.00 மணியளவில் நான், ரோபர்ட், காளிதாஸ் ஆகியோர் லெட்சுமாங்குடிக்கு நினைவஞ்சலி போஸ்டர் ஒட்ட சென்றோம். பாதி ஒட்டிவிட்டு இரவு 11.00 மணியளவில் வடபாதிமங்கலம் பேருந்து நிலையத்திற்கு வந்தோம்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:22:43 +0530

நாங்கள் வடபாதிமங்கலம் பேருந்து நிலையத்தில் போஸ்டர் ஒட்டிக் கொண்டிருந்தபோது கோபிநாத் எங்களிடம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என கேட்டார். அவரது தம்பி திலீபன் சூர்யா, கோபியிடம் ஏன் அவங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் என கேட்டார். அங்குவந்து அப்பு (எ) பெரியபாண்டி இந்த வேலையா பார்க்குற என ரோபர்டிடம் கேட்டார். அப்போது ரோபர்டிடம் கோபிநாத் அடுத்து வருடம் உனக்கு கண்ணீர் அஞ்சலி போஸ்ட் ஒட்டிடுவோம் என சொன்னார். நாங்கள் பின் மத்திசம் செய்து ரோபர்டை அவர் வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டோம். அவனை நீ படுத்து தூங்கு என சொல்லிவிட்டு மீத போஸ்டரை ஒட்ட நாங்கள் சென்றுவிட்டோம். போஸ்டரை ஒட்டிவிட்டு மறுபடியும் வடபாதிமங்கலம் பேருந்து நிலையத்தில் வந்து பார்த்தபோது ரோபர்டிடம் கோபி, சின்ராஜ், சிவனேசன், அப்பு (எ) பெரியபாண்டி, அஸ்வின், விக்னேஷ், சுரேந்தர், திலீப் ஆகியோர் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். மேற்படி நபர்களில் 4 நபர்கள் ரோபர்டை கட்டையை எடுத்து அடித்தார்கள், அதில் ரோபர்ட் மயங்கி கீழே விழுந்துவிட்டார். செத்துட்டான் என சொல்லி வந்தார்கள். திரும்பி கோபி, திலீப் ஆகியோர் வந்து உயிர் இழுத்துகிட்டு இருக்கு என சொல்லி கருங்கல்லை எடுத்து ரோபர்டின் தலையில் போட்டார்கள். அப்போது ரோபர்டின் உயிர் நின்று விட்டது. எங்களுக்கு பயம் வந்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:22:48 +0530

விட்டது, நாங்கள் மறைந்திருந்து பார்த்தோம். நாங்கள் பயந்துகொண்டு நம்மள எதுவும் செய்து விடுவார்கள் என நினைத்து வீட்டில் போய் படுத்து விட்டோம். மறுநாள் விடியற்காலை 5.30 மணியளவில் எனக்கு என் பக்கத்து வீட்டை சேர்ந்த பரமானந்தன் என்பவர் போன் செய்து நீங்கள் மூவர்தான் நோட்டீஸ் ஒட்ட போனீர்கள் ரோபர்ட் ஏன் இப்படி கிடக்கிறான் என சொன்னார். பிறகு அந்த இடத்திற்கு வந்து பார்த்தபோது ரோபர்ட் இறந்து கிடந்தான். என்னை 13.02.2025 ம் தேதி போலீசார் காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி விசாரணை செய்தார்கள். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 4 கட்டைகள்தான் ரோபர்ட்டை எதிரிகள் அடிக்க பயன்படுத்தியது. என்னிடம் காட்டப்படும் கருங்கல்தான் ரோபர்டின் தலையில் எதிரிகள் போட்டு அடித்தது. மேற்படி 4 கட்டைகள் **சா.பொ.1 முதல் சா.பொ.4**, கருங்கல் **சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

ரோபர்ட் அடிபட்டு கிடந்த இடத்திலிருந்து கொஞ்ச தூரத்தில்தான் வடபாதிமங்கலம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரி. ரோபர்ட் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரி. பட்டியல் சாட்சி 10 பரமானந்தம் எனக்கு வேண்டியவர் என்றால் சரி.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:22:56 +0530

பரமானந்தத்தின் சகோதரர் வீட்டில்தான் நான் தற்போது குடியிருந்து வருகிறேன். வடபாதிமங்கலம் பேருந்து நிலையத்தில் என் வீடு இல்லை என்றால் சரி, 100 மீட்டர் தூரத்தில் உள்ளது. நாங்கள் மூவரும் போஸ்டர் ஒட்டிவிட்டு ஒரே வண்டியில்தான் வடபாதிமங்கலம் பஸ் ஸ்டாண்டிற்கு வந்தோம். அப்போதுதான் சம்பவம் நடைபெற்றது. டாஸ்மாக் கடையின் அருகில்தான் ரோபர்டின் சடலம் கிடந்தது. சண்டை நடந்தபோது நான் பக்கத்தில்தான் இருந்தேன், நானும் சண்டையை தடுத்தேன். அந்த சண்டையில் எனக்கு காயம் ஏற்படவில்லை. சண்டை முடிந்தபின்னும் ஆஜர் எதிரிகள் அங்கேயே இருந்தார்கள். அடிபட்டு கிடந்த ரோபர்டை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக கொண்டு சேர்க்க வேண்டும் என்று நினைக்கவில்லை என்றால் சரி. ரோபர்ட்டை அதே இடத்தில் போட்டுவிட்டு எதிரிகளும் நானும் அங்கிருந்து சென்று விட்டோம் என்றால் சரி. போலீசார் விசாரணையில் சண்டை நடந்தபோதும் ரோபர்ட் தாக்கப்படும்போதும் நான் உடனிருந்த விபரத்தை கூறியுள்ளேன் என்றால் சரி. அவ்வாறு சொல்லவில்லை என்றால் தவறு. மறுநாள் காலை பரமானந்தம் என்னை போன் செய்து கூப்பிட்ட போது நான் காலை 5.30 மணிக்கு சென்று பார்த்தேன். பரமானந்தத்திடம் ரோபர்டிற்கு ஏற்பட்ட பிரச்சனைகள் பற்றி சொன்னேன். ரோபர்ட் கிடந்த இடத்திற்கு காலையில் நான்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.01.27 14:23:05 +0530

சென்றேன். அந்த இடத்தில் ஊர்காரர்கள் கூடி நின்றார்கள். போலீசாரும் அந்த இடத்திற்கு வந்திருந்தார்கள். DSP, ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் அந்த இடத்தில் இருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது காலை 6.00 மணியிருக்கும். காலை 6.00 மணிக்கு போலீசார் என்னை விசாரித்தபோது நடந்த விபரத்தை சொன்னேன், ஆய்வாளர் அம்மா எல்லாவற்றையும் குறித்துக் கொண்டார்கள். காலை 6.00 மணிக்கு சென்ற நான் ரோபர்ட் பாடியுடன் மருத்துவமனை சென்றேன். பிரேத பரிசோதனை செய்தபோது உடனிருந்தேன். அவரது இறுதி சடங்குகள் முடிந்தபின்தான் சென்றேன். சா.பொ.1 முதல் சா.பொ.5 சாதாரணமாகத்தான் உள்ளன. இவற்றில் ரோபர்டை தாக்கியதற்கான குறிப்பிட்ட அடையாளங்கள் ஏதும் இல்லையென்றால் சரி. சம்பவத்திற்கு பின் தற்போதுதான் நீதிமன்றத்தில் சா.பொ.1 முதல் சா.பொ.5 யை முதன் முதலாக பார்க்கிறேன் என்றால் சரி. சா.பொ.1 முதல் சா.பொ.5 ஆல் ரோபர்டை எதிரிகள் தாக்கவில்லை என்றால் தவறு. போலீசார் விசாரணையில் 4 நபர்கள் ரோபர்டை கட்டையை எடுத்து அடித்தார்கள், அதில் ரோபர்ட் மயங்கி கீழே விழுந்துவிட்டார் எனவும் செத்துட்டான் என சொல்லி வந்தார்கள் எனவும் திரும்பி கோபி, திலீப் ஆகியோர் வந்து உயிர் இழுத்துகிட்டு இருக்கு என சொல்லி கருங்கல்லை எடுத்து ரோபர்டின் தலையில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:23:11 +0530

போட்டார்கள், அப்போது ரோபர்டின் உயிர் நின்று விட்டது எனவும் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. எனக்கு தொழில் என்பது விவசாய கூலி வேலை என்றால் சரி. வழக்கிற்காக தெரியாத சங்கதிகளை தெரிந்ததுபோல் பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:23:17 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.142/2025**

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சேதுராமன் | Father's Name | : | முருகையன் |
| Village | : | வடபாதிமங்கலம் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 70 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 27th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடபாதிமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் வடபாதிமங்கலத்தில் சைக்கிள் கம்பெனி வைத்துள்ளேன். அ.சா.1 முதல் அ.சா.ஆ.3 மற்றும் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள், அவர்களை தெரியும். ரோபர்ட் இறப்பு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. 08.02.2025 ம் தேதி நான் ஊரில் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:23:28 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 08.02.2025 ம் தேதி இரவு 11.00 மணியளவில் நான் என் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது தெருவில் ஏதோ பிரச்சனை நடப்பது போல் சத்தம் கேட்டது எனவும் நான் கதவை திறந்து பார்த்தபோது கோபிநாத், திலீபன் சூர்யா, சின்னராஜ் (எ) வடிவழகன், சுரேந்தர், அஸ்வின், விக்னேஷ், சிவநேசன், அப்பு (எ) பெரியபாண்டி ஆகியோர் ரோபர்டிடம் பிரச்சனை செய்தார்கள் எனவும் தெற்கு வீதியில் ரவிச்சந்திரன் வீட்டு முன்பாக ரோபர்டை கோபிநாத், திலீபன் சூர்யா, சின்னராஜ் (எ) வடிவழகன், சுரேந்தர், அஸ்வின், விக்னேஷ், சிவநேசன், அப்பு (எ) பெரியபாண்டி ஆகியோர் ஒன்று சேர்ந்து இவனை அடித்து கொல்லுங்கடா என சத்தம் போட்டுக்கொண்டே கட்டையாலும் ரீப்பராலும் ரோபர்டை மாறி மாறி அடித்தார்கள் எனவும் அப்போது சின்னராஜ், சுரேந்தர், அஸ்வின் மூவரும் கீழே கிடந்த கருங்கல்லை தூக்கி இதோடு செத்து ஒழிந்துபோடா என சொல்லிக் கொண்டே கீழே கிடந்த ரோபர்டின் தலையில் போட்டார்கள் எனவும் அப்ப ரோபர்டிற்கு கையும் காலும் வெட்டி வெட்டி இழுத்தது இதைபார்த்த கோபி இவன் இன்னும் சாவலடா என சொல்லி மறுபடியும் கல்லை தூக்கி ஓங்கி ரோபர்டின் தலையில் போட்டுவிட்டு ஜோலி முடிஞ்சி போச்சு என சொல்லிக்கொண்டு அங்கிருந்து ஆளுக்கொரு பக்கமாக போய்விட்டார்கள் எனவும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:23:35 +0530

நான் போய் பார்த்தபோது ரோபர்ட் இரத்த வெள்ளத்தில் கிடந்தான் எனவும் இது அவர்களுக்குள் ஏற்கனவே உள்ள முன்விரோதத்தால் நடந்த பிரச்சனை இது சம்மந்தமாக யாரிடமும் சொல்ல வேண்டாம் என நினைத்து நான் வீட்டிற்குள் சென்று படுத்துவிட்டேன் எனவும் 11.02.2025 ம் தேதி வடபாதிமங்கலம் காவல் ஆய்வாளர் கொலை சம்பவம் பற்றி விசாரித்தபோது நான் பயத்தின் காரணமாக கொலை சம்பவத்தை யாரிடமும் சொல்லாமல் இருந்துவிட்டேன் எனவும் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:23:40 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.142/2025**

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | விஜயராகவன் | Father's Name | : | ராஜமாணிக்கம் |
| Village | : | வடபாதிமங்கலம் | Taluk | : | வடபாதிமங்கலம் |
| Calling | : | | Age | : | 35 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 27th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடபாதிமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் வடபாதிமங்கலத்தில் Water Plant கம்பெனியில் வேலை பார்க்கிறேன். அ.சா.1 முதல் அ.சா.ஆ.4 மற்றும் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள், அவர்களை தெரியும். ரோபர்ட் இறப்பு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. 08.02.2025 ம் தேதி நான் ஊரில் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:23:47 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 08.02.2025 ம் தேதி இரவு 11.00 மணியளவில் நான் என் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது தெருவில் ஏதோ பிரச்சனை நடப்பது போல் சத்தம் கேட்டது எனவும் நான் கதவை திறந்து பார்த்தபோது கோபிநாத், திலீபன் சூர்யா, சின்னராஜ் (எ) வடிவழகன், சுரேந்தர், அஸ்வின், விக்னேஷ், சிவநேசன், அப்பு (எ) பெரியபாண்டி ஆகியோர் ரோபர்டிடம் பிரச்சனை செய்தார்கள் எனவும் தெற்கு வீதியில் ரவிச்சந்திரன் வீட்டு முன்பாக ரோபர்டை கோபிநாத், திலீபன் சூர்யா, சின்னராஜ் (எ) வடிவழகன், சுரேந்தர், அஸ்வின், விக்னேஷ், சிவநேசன், அப்பு (எ) பெரியபாண்டி ஆகியோர் ஒன்று சேர்ந்து இவனை அடித்து கொல்லுங்கடா என சத்தம் போட்டுக்கொண்டே கட்டையாலும் ரீப்பராலும் ரோபர்டை மாறி மாறி அடித்தார்கள் எனவும் அப்போது சின்னராஜ், சுரேந்தர், அஸ்வின் மூவரும் கீழே கிடந்த கருங்கல்லை தூக்கி இதோடு செத்து ஒழிந்துபோடா என சொல்லிக் கொண்டே கீழே கிடந்த ரோபர்டின் தலையில் போட்டார்கள் எனவும் அப்ப ரோபர்டிற்கு கையும் காலும் வெட்டி வெட்டி இழுத்தது இதைபார்த்த கோபி இவன் இன்னும் சாவலடா என சொல்லி மறுபடியும் கல்லை தூக்கி ஓங்கி ரோபர்டின் தலையில் போட்டுவிட்டு ஜோலி முடிஞ்சி போச்சு என சொல்லிக்கொண்டு அங்கிருந்து ஆளுக்கொரு பக்கமாக போய்விட்டார்கள் எனவும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:23:53 +0530

நான் போய் பார்த்தபோது ரோபர்ட் இரத்த வெள்ளத்தில் கிடந்தான் எனவும் இது அவர்களுக்குள் ஏற்கனவே உள்ள முன்விரோதத்தால் நடந்த பிரச்சனை இது சம்மந்தமாக யாரிடமும் சொல்ல வேண்டாம் என நினைத்து நான் வீட்டிற்குள் சென்று படுத்துவிட்டேன் எனவும் 11.02.2025 ம் தேதி வடபாதிமங்கலம் காவல் ஆய்வாளர் கொலை சம்பவம் பற்றி விசாரித்தபோது நான் பயத்தின் காரணமாக கொலை சம்பவத்தை யாரிடமும் சொல்லாமல் இருந்துவிட்டேன் எனவும் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.27 14:24:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.